# உண்மையை தெரிந்துக்கொள்ள ஆசையா?

## பாகம் 2






Private Circulation

என் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே,

பொதுவாக இந்த உலக வாழ்க்கையில், எல்லா மனிதரும் நல்ல பள்ளியில், அல்லது கல்லூரியில் இடம் (*seat*) கிடைக்க வேண்டும், நன்றாக படிக்க வேண்டும், நல்ல வேலை கிடைக்க வேண்டும், நல்ல குடும்பத்தில் திருமணம் செய்ய வேண்டும் என்று அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அதற்காக அதிக முயற்சியும் செய்து நேரத்தை செலவிடுகிறார்கள்.

அதைப் போலவே, மரணத்திற்கு பின்பு கிடைக்கும் துன்பம் இல்லாத இன்பமான வாழ்க்கையைப் பெறவும், முடிவில்லாத நிலையான மோட்சம் (சொர்க்கம்) செல்லவும், நாம் அதிக ஆர்வமும் காட்ட வேண்டும், அதற்காக நேரத்தையும் செலவிட வேண்டும்.

## ஆர்வமும் நம்பிக்கையும்

நீங்கள் பிரமணராய் இருந்து கிறிஸ்தவ ஆலயத்திற்கு ஏன் வருகிறீர்கள் என்று விரிவுரையாளர் (*Lecturer*) *Mr* சுவாமிநாதன் அவர்களிடம் கேட்ட போது, அவர் பின்வரும் பதிலை சொன்னார்.

அவர் *M.E* படிக்கும்போது, அவருடைய நண்பர்கள் அவரிடம் பின்வரும் கேள்வியை கேட்டனராம். நிறைய பேர் நான் மட்டும்தான் கடவுளின் அவதாரம் என்றும், நானும் ஒரு கடவுளின் அவதாரம் என்றும் கூறுகின்றனர். இது எப்படி சாத்தியம்? நம் நாட்டிற்கு *1000* பிரதம மந்திரிகள் இருந்தால் எப்படி இருக்கும்? நிஜத்தில் அப்படி இருக்க முடியுமா? முடியவே முடியாது. நம்மை படைத்த உண்மையான(*Real*) கடவுள் எல்லோரையும் பார்க்கிறார் அல்லவா? ஆகவே, யாரையும் நீ கும்பிட வேண்டாம். கடவுளை கும்பிட எங்கும் செல்லவும் வேண்டாம். தினந்தோறும் தூங்குவதற்கு முன்பாக இரண்டு நிமிடம் பக்தியோடு கண்களை மூடி, தாழ்மையோடு கடவுளை நோக்கி, “எங்களை படைத்த உண்மையான தெய்வமே, நீங்கள் மனித அவதாரமாக இந்த பூமிக்கு வந்தீர்களா? எங்கள் பாவத்திற்க்காக இரத்தம் சிந்தி பலியானீர்களா?” என்று கேட்க சொன்னார்கள். எங்கள் விரிவுரையாளர் யோசிக்க ஆரம்பித்து விட்டாராம். எப்படி நிறைய கடவுள்/அவதாரம் இருக்க முடியும்?

சொர்க்கம் செல்ல வேண்டுமானால், உண்மையான கடவுளை மட்டுமே வணங்க வேண்டும் என்று முடிவு செய்து, அவர்கள் நண்பர்கள் சொன்னது போல, எந்த கோவிலுக்கும் செல்லாமல், மேற்சொன்ன அந்த இரண்டு கேள்விகளையும் ஒவ்வொரு நாளும் கேட்க ஆரம்பித்தார். ஒன்றரை (1.5) ஆண்டுகளாக கேட்டார். உண்மையான கடவுளிடமிருந்து எந்த ஒரு பதிலும் வரவில்லை. நிச்சயமாக உண்மையான கடவுள் என்னை தேடி வருவார். எனக்கும் தரிசனம் கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து அதையே ஆர்வத்தோடு கேட்க ஆரம்பித்தார். அவருடைய ஆர்வத்தை பார்த்து, இயேசு கிறிஸ்து அவருடைய கனவில் தரிசனமாகி, நான் உன்னுடைய பாவத்திற்காகவும் சேர்த்து தான் இரத்தம் சிந்தினேன். எனக்கு சேவை செய் என்று சொன்னார். மறுநாளில் இருந்து, பரிசுத்த வேதத்தை(*Bible*) எடுத்து கொண்டு, இயேசுதான் உண்மையான பாவ பரிகாரி, இரட்சகர், மீட்பர், கடவுளின் அவதாரம் என்று சொல்லி போதிக்க ஆரம்பித்தார். அப்பொழுது நான் எங்கள் விரிவுரையாளரை பார்த்து: "சரி, நீங்கள் சொல்வதை நாங்கள் நம்புகிறோம். உங்க பெற்றோர் நீங்கள் சொன்னதை நம்பினார்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர், என் பெற்றோர் நம்பவில்லை. இயேசு யாரையும் கட்டாயப்படுத்த மாட்டார் என்று பதில் கூறினார்.

ஆம். உண்மைதான். இயேசு எல்லா மக்களினத்தையும் அன்போடு அழைக்கிறார். யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. இயேசுவின் அழைப்பை ஏற்று, அவரை பின்பற்றுகிறவர்கள் (*followers*) தங்கள் மரணத்திற்கு பிறகு அவர் இருக்கும் மோட்சம் செல்வார்கள். அன்றிலிருந்து நானும் இயேசு ஒருவர்தான் பாவத்தின் பரிகாரி, இரட்சகர், அவரை மட்டும்தான் வணங்க வேண்டும் என்று முடிவு எடுத்து இன்று வரை இயேசுவுக்கே உண்மையாக வாழ்ந்து கொண்டு இருக்கிறேன்.

## ஆர்வமும் கண்ணீரும்

கேரளாவில் உள்ள கொல்லம் மாவட்டத்தில் வசித்து வரும் ஒரு இஸ்லாமிய இளம்பெண் நசீலா பீவி என்பவர். குரானின் கட்டளைப்படி வளர்க்கப் பட்டவர்.

ஒரு நாள் பஸ் ஸ்டாப்பிற்கு வந்த அந்த சகோதரியிடம், இயேசு கிறிஸ்துவே தெய்வம் என்றும், நீ இயேசுவை விசுவாசித்தால்தான் சொர்க்கம் செல்ல முடியும் என்றும் கூறினதும் அல்லாமல் ஒரு பைபிளையும் கொடுத்திருக்கிறார் ஒருவர். இவருக்கோ பயங்கர கோபம். அந்த நபர் பார்க்கும்படியே அவர் கொடுத்த பைபிளை கிழித்து, தீ வைத்து எரித்து தன் கோபத்தை ஆற்றிக்கொண்டார். ஆனால் அந்த நபரோ, கோபப்படாமல், நீ பைபிளை எடுத்துக் கொண்டு, இயேசுவே இறைவன் என்று உலகம் முழுக்க கூறும் காலம் வரும் என்று சொல்லிச் சென்றுவிட்டார். வீட்டிற்கு வந்த நசீலா பீவியால் வழக்கம்போல் இருக்க முடியவில்லை. நிம்மதி, சமாதானம் தொலைந்து போய்விட்டது. முழங்கால் படியிட்டு கண்ணீரோடு இரு கரங்களையும் மேல் நோக்கி உயிர்த்திக் கதறினாள். அந்த சமயமே, இயேசு கிறிஸ்து அவளுக்குத் தரிசனமாகி, “மகளே! பயப்படாதே! உனக்காக மரித்த இயேசு கிறிஸ்து நானே“ என்றார். தன்னிடம் தரிசனமாகிய ஒரு கடவுளை எப்படி மறுக்கமுடியும்? அந்த நாளே இயேசுவை ஏற்றுக்கொண்டாள். இந்த மாற்றத்தை அறிந்த உறவினர்களும் குடும்பத்தினரும், நசீலாவை அடித்து துன்புறுத்தி இறந்துப்போனாள் என்று எண்ணி, இதிக்கரா ஆற்றில் தூக்கி வீசினாலும் அவர் நம்பிய இயேசு கிறிஸ்து அவரை கைவிடாமல் காப்பாற்றினார். இன்றும் இயேசுவின் சீடராய் அயராது இயேசுவே பாவத்திலிருந்து இரட்சிக்கிறவர், நம்மை மோட்சம் சேர்க்கிறவர் என்று போதிக்கிறார். *YouTube*-ல் அவருடைய சாட்சியைப் பார்க்கலாம்.

## ஆர்வமும் ஆராட்சியும்

சிலர் உண்மையான கடவுள் யார் என்று அறிய விரும்பி, அதிக ஆர்வத்தோடும் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து பின்வரும் வரலாற்று உண்மைகளை பல புத்தகங்களில் எழுதி வெளியிட்டுள்ளனர்.

### இயேசுவைப் பற்றி சுவாமி விவேகானந்தரின் கருத்து:

*1.* முக்தி வேண்டுமானால் இயேசுவை அணுகுங்கள். நீங்கள் கற்பனை செய்ய முடிந்த எந்தக் கடவுளை விடவும் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர் இயேசு - ஞானதீபம் சுடர் *1* பக்கம் *294*

*2.* இயேசு நாதரைப்பற்றி ஒவ்வொரு சிற்றூரின் மூலை முடுக்குகளிலும் பிரச்சாரம் செய்யுங்கள் - ஞானதீபம் சுடர் *1,* பக்கம் *128,129*

*3.* கிறிஸ்துவானவர் தொட்ட உடனே மனிதனுடைய ஆன்மாவே

மாறுதல் அடைகின்றது. கிறிஸ்துவைப் போல அவன் மாறி விடுவான். அவனது வாழ்க்கை முழுவதும் புனிதமாகி விடும் - ஞான தீபம், சுடர் *4,* பக்கம் *500*

## வேதங்கள்/புராணங்கள்/உபநிடதங்களில் இயேசு கிறிஸ்து:

*1.* கௌ மாரோ யோகோ அஜநிஷ்ட புத்தா இன் வர்வேதன்வை உத்தராத் - அதர்வண வேதம் *13:3,4.* பொருள்: ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவரே பெரியவர் (பைபிளில் ஏசாயா *7:14,* மத்தேயு *1:21,* லூக்கா *1:31,32*)

*2.* சகஞ்ஞ பிரஜா சிருஷ்டுவ புரோவச்சா பிராஜாபதி அதினா பிரஷ்டி விஷ்துப மேடி ஓ இஸ்பிக்கா மதுக் - சாம வேதம் தாண்டிய மகா பிரமாணம் *2*-வது காண்டம் *7*-வது அத்தியாயம். பொருள்: சர்வத்தையும் படைத்த நிஷ்கலங்கா புருஷா அல்லது விஷ்வகர்மா எனப்படும் பிரஜாபதி (பிரஜா=மக்கள்/பதி=தலைவர்) தான் படைத்த ஜனங்களின் பாவங்களை போக்க தாமே பலியாவார் (பைபிளில் யோவான் *1:29*)

*3.* ரிக்வேதம் *10:135*/இத்ராயா உப்பிணியாசம் *1:1,3* - பாவத்தை போக்குவார் (பைபிளில் யோவான் *1:29*). *4.* ரிக் *10:21*-ல் இரத்தம் சிந்தாமல் பாவமன்னிப்பு இல்லை (எபிரேயர் *9:22*). *5.* மகா பிரமாணம் *4:15*-ல் படைத்த தெய்வம் பலியாக வேண்டும். (*1*கொரிந்தியர் *15:3-5, 1*தீமோத்தேயு *3:16*) *6.* ரிக் *10:90; 7:15*-ல் முள்முடி சூட்டப்பட வேண்டும் (மத்தேயு *27:29*) *7.* பிறனிடக்க உப்பிணியாசம் *3:9,38*-ல் ஆணி அடித்து மரத்தில் தூக்கப்படுவார் (மத்தேயு *27:35*) *8.* யசுர் *31*-ல் கசப்பான நீரை கொடுப்பார்கள் (மத்தேயு *27:34*) *9.* ரிக் *10*-ல் பிராஜாபதி மரிக்கவேண்டும் (லூக்கா *23:46*) *10.* இத்ராயாபிரமாணம் *2:6*-ல் அடிக்கப்பட்டவர் எலும்புகள் முறிவதில்லை. (யோவான் *19:33*) மனிதனை பாவத் தண்டனையிலிருந்து மீட்க வந்த மீட்பர் கர்த்தராகிய இயேசுவே. இவரே பாவத்திலிருந்து இரட்சிக்கிறவர்.

## திருக்குறளில் இயேசு கிறிஸ்து:

*1.* இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டும் - கடவுள் வாழ்த்து குறள் *5*

பொருள்: மக்களை இருளாகிய நரகத்தில் கொண்டு சேர்க்கும் இரு வினைகளாகிய ஜென்ம பாவமும், கர்ம வினையும் சேராதவராக இறைவன் உலகுக்கு வந்தாரென்றும், அவர் உலகுக்கு விசேஷித்த பொருளாகிய மீட்பை/இரட்சிப்பைக் கொண்டு வந்தார்

*2.* பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார் - கடவுள் வாழ்த்து குறள் *6*

பொருள்: பொறியாகிய கருவியில் (சிலுவையில்) தன் ஐந்து புலன்களையும் அவித்தவனாகிய (பலியாக்கியவனாகிய) இறைவன், மனிதரை பாவத்துக்குள்ளாக்கிய சாத்தானின் ஆதிப் பொய்யை தீர்த்து ஒழித்து மனிதனுக்கு ஒழுக்க நெறி உண்டாக்கிக் காட்டிய வழி நிற்பவன் நீடு வாழ்வு (நித்திய ஜீவனை) பெற்றுக் கொள்வான்.

இது போன்று திருக்குறளில் மற்ற குறள்களும் இயேசு கிறிஸ்துவையும் அவரின் இரட்சிப்பையும் அறிவிக்கின்றன.

## சைவ வைணவத்தில் இயேசு கிறிஸ்து:

பரிசுத்த வேதம் “இழந்து போனதைத் தேடவும், இரட்ச்சிக்கவும் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தார் - *1* தீமோத்தேயு *1:15*” எனவும், “அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபம் எடுத்து மனுஷ சாயலானார் - பிலிப்பியர் *2:7*” எனவும் கூறுகிறது. இந்த வசனங்களை உறுதிப்படுத்தும் விதமாக, கடவுள் ஏன் மனிதனாகப் பிறந்தார் என்ற கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கொள்கைகளை பல சைவ, வைணவப் பாடல்களிலும் காணலாம்.

*1.* பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிர் அளிப்பான் எந்நின்ற யோனியுமாய் பிறந்தாய் இமையோர் தலைவா - நம்மாழ்வார் திருவிருத்தம் *1-3580.* பொருள்: கறைபட்ட ஞானமும், தவறான ஒழுக்கமும், அழுக்கு (பாவம்) நிறைந்த உடம்பும் நம்மை ஆட்கொள்ளாமல் நமக்கு நல்லதோர் வாழ்வைத் தருவதற்காகவே இறைவன் ஒரு ஸ்திரியில் பிறந்தார்

*2.* இறைவா இன்பத்து எமை இருத்த வேண்டி பிறவா முதல்வன்

பிறந்தான் - **போற்றி பஃறொடை 69.** <u>பொருள்:</u> நீங்காத நித்திய இன்பத்தில் நாம் இருக்க வேண்டும் என்பதற்காகப் பிறவா முதல்வனாகிய இறைவன் பிறந்தார்.

3. அவன் கண்டாய் நன்னெஞ்சே ஆரருளும் கேடும் அவன் கண்டாய் ஐம்புலனாய் நின்றான் அவன் கண்டாய் - **நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் இயற்பா இரண்டாம் திருவந்தாதி (24)-3307**

<u>பொருள்:</u> மாசே இல்லாத கடவுள் மாசுள்ள மனிதனின் பாவத்தை அறுத்து மீட்பதற்காக ஐம்புலன்களையும் உடைய மனிதன் ஆனார்.

4. ஆவியாய் அவியுமாகி, அருக்கமாய்ப் பெருக்கமாகிப் பாவியர் பாவம் தீர்க்கும் பரமனாய்ப் பிரமனாகி - **அப்பர் தேவாரம் 320**

<u>பொருள்:</u> பாவியர் பாவத்தைப் போக்குவதற்காக பலியானார்

இப்படி அநேக பாடல்களையும், சூத்திரங்களையும், சரித்திர ஆய்வுகளையும் எழுதிக் கொண்டே போகலாம்.

## <u>மரணத்திற்குப் பின் உள்ள இரண்டு வாழ்க்கை:</u>

ஒரே ஒரு தடவை மரிப்பதும் பின்பு நியாத்தீர்ப்பு அடைவதும் மனிதனுக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது (எபிரேயர் 9:27) என்று வேதம் சொல்லுகிறது. **மரணத்திற்குப் பிறகு இரண்டு விதமான வாழ்க்கை இருக்கிறது.** ஒன்று, நித்திய முடிவில்லாத, துன்பம்/பசி/அழுகை இல்லாத பேரின்ப வாழ்க்கை. இதை சொர்க்கம்/மோட்சம்/பரலோகம் என்பர். **மற்றொன்று பற்கடிப்பும் அழுகையும் வேதனையும் உள்ள நரகம் (Hell).** இந்த இரண்டு வாழ்க்கையில் நீங்கள் எந்த வாழ்க்கையை தெரிந்தெடுக்கப் போகிறீர்கள்? உங்களுக்காகவும் எனக்காகவும் பாவ பரிகார பலியாக சிலுவையில் பலியாகி மூன்றாம் நாள் உயிர்த்த இயேசுவை பற்றிய உண்மையை தெரிந்து கொண்டு, அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் சொர்க்கம் செல்ல முடியும். இதையே பரிசுத்த வேதாகமம் புதிய ஏற்பாடு முழுவதுமாக் கூறுகிறது. **காலத்தை தாமதப்படுத்தி ஏமாந்து போக வேண்டாம். பாவத்தோடு மரிக்கும் மனிதன் நரகத்தில் தள்ளப்பட்டபிறகு வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம் (லூக்கா 16:23-31)?** நீங்கள் மதம் மாற வேண்டாம், ஆனால் மனம் மாறுங்கள். இயேசு பெருமானை ஏற்றுக்கொள்ளுங்கள். பாவத்தை விட்டு விலகுங்கள். பாவமும் அநியாயமும் செய்யாமல் வாழுங்கள். அவருடைய நித்திய சொர்க்க வீட்டை சென்றடையுங்கள்.

**இந்த உண்மை உங்களுக்கு பிடித்திருந்தால், தயவு செய்து, இந்த செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். மெய்யான தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவின் அமைதியும் சமாதானமும் உங்களுக்கு உண்டாவதாக!**

***We are distributing this small track as per Indian Constitution Law Article 25. Our intention is not to convert anyone to Christian religion, but to know the truth. This track is intended for private circulation only.***

**மேலும் விபரங்களுக்கு உங்களுக்கு அருகில் உள்ள கிறிஸ்தவ சபையை அணுகவும்.**

**தொடர்புக்கு:**

Preach the Truth Ministries, Bangalore
Email: ptmm.india@gmail.com